Registered as a Newspaper in Sri Lanka No. A 15    ஆண்டுச் சந்தா: 3-50    விலை சதம் 25

# ஐக்கியதீபம்

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச | 10 |
| கடன் முறி ஐ. நா. ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |


மலர்: 34    (புதிய தொடர்) ஆடி, 1978    இதழ் 2

## கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்)
# சட்டமூலம் நிறைவேறியது

**கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு இப்பொழுது நடைமுறைக்கு வந்துள்ளது. இச் சட்டம் 1978ம் ஆண்டில் ஆக்கப்பட்ட 12ம் இலக்கச் சட்டம் எனப்படுகின்றது.**

**இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:**

- **பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழுக்களைக் கலைத்து அவற்றைப் புனரமைத்தல்**
- **இத்தகைய சங்கங்களின் அலுவல்களை நடாத்தி நிருவகிப்பதற்கு மாற்று ஒழுங்குகளைச் செய்தல்.**
- **இத்தகைய நிருவாகக் குழுக்களுக்குச் செய்யப்பட்டுள்ள சில நியமனங்களைச் செல்லுபடியாக்குதல்**

இச்சட்டம் ஜூலை 20ந் திகதி 1978ல் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக கூட்டுறவு அமைச்சர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்துள்ளார்.

இச்சட்டம் குறித்து கூட்டுறவு ஆணையாளர் அனுப்பியுள்ள சுற்று நிருபம் (இல 11/38 78/249) பின்வரும் விளக்கங்களை அளித்துள்ளது:

(1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 18 மாதங்களுக்கே அதாவது தேவநாயகம் ஆணைக்குழு கூட்டுறவு இயக்கத்தின் மறுசீரமைப்பைப்பற்றி தனவுரைகள் சமர்ப்பிக்கும் வரை நடைமுறையில் இருக்கும்.

(2) இச்சட்டம் 18 மாதங்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்ற பொழுதிலும் நியமிக்கப்பட்ட நெறியாளர் குழுக்களின் ஆயுள் இம்முழுக் கால எல்லைக்கும் (அதாவது 18 மாதங்கள்) நீடிக்கும் என்ற கட்டுப்பாடில்லை. குறைந்த கால எல்லைக்கும் நியமனங்கள் செய்யப்படலாம்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தேசம் இல்லை. நெறியாளர் குழுத் தேர்தல்களில் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும் சங்கங்களிலும் தொழிற் பரப்புக்களை மீண்டும் வரையறுக்கவேண்டிய சங்கங்களைப் பொறுத்தவரையிலும் இச்சட்ட ஏற்பாடுகள் செயற்படுத்தப்படவேண்டும். தற்பொழுதுள்ள நெறியாளர் குழுக்கள் செயற்திறமையற்றவையாய் உள்ள சங்கங்கள் குறித்தும் நடைமுறைப்படுத்தப்படும். சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு பொதுச் சபையைக் கூட்டுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ள சங்கங்கள் குறித்தும் இச்சட்ட ஏற்பாடுகள் செயற்படுத்தப்படும்.

இத்தகைய சங்கங்கள் குறித்து சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தபின்னர் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் இச்சுற்று நிருபத்தில் கூறியுள்ளார்.

இவ்வறிக்கைகளை ஆராய்ந்த பின்னர் இச்சட்ட ஏற்பாடுகளை குறித்த சங்கம் தொடர்பாக செயற்படுத்துவதா இல்லையா என்பதை கூட்டுறவு அமைச்சர் தீர்மானிப்பார் என கூட்டுறவு ஆணையாளர் இச்சுற்று நிருபத்தில் மேலும் கூறியுள்ளார்.

(4) இச்சட்டத்தின் பகுதி 2ன் கீழ் நியமிக்கப்படும் நெறியாளர் குழுக்கள் 3 பேருக்குக் குறையாததும் 5 பேருக்குக் கூடாததுமாய் அமையும். இந்நெறியாளர்களில் ஆகக் குறைந்தது ஒருவராவது அரசாங்க ஊழியனாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் குறிப்பிட்ட சங்கத்தின் உபவிதிகளின்படி தகைமை உடையவராய் இருத்தல் வேண்டும்.

நெறியாளர் குழுக்கள் சிறியனவாய் இருத்தல் அவற்றின் மேற்பார்வை பயன் முனைப்பானதாய் இருக்குமென அமைச்சர் கருதுகின்றார். இச்சட்ட ஏற்பாடுகளின் பகுதி 2 (8)படி அமைச்சரின் தற்றுணிபு அதிகாரத்திற்கு ஏற்ப நெறியாளர்களுக்கு படிகள் வழங்கப்படலாம். இன்றைய அமைச்சரவையின் முடிவின்படி முழு நேரத் தலைவருக்கு மாதாந்தம் ரூ 250/- படியாக வழங்கப்படலாம். ஏனைய நெறியாளர்கள் இப்பொழுது தாம் பெறும் படிகளைத் தொடர்ந்து கொள்ள உரித்துடையவர்கள்.

(5) இச்சட்டத்தின் கீழ் நெறியாளர் குழு நியமிக்கப்படுமாயின் அதன் ஆயுட்காலம் முடியுமுன்னர் சங்கத்தின் நிருவாகக் குழுவை சங்கத்தின் உபவிதிகளுக்கு ஏற்ப புனரமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வது பதிவு காரியஸ்தரின் சட்டக் கடமையாகும்.

(6) 7-2-77க்குப் பின்னர் பதவியிலிருந்த நெறியாளர் குழுக்களின் செயல்களினால் ஏற்பட்ட நட்டங்களைப் பொறுப்பேற்க மறுப்பதற்கு இச்சட்டத்தின்படி அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. களவு, மோசடி போன்றவற்றால் இந்நட்டங்கள் ஏற்பட்டன என அமைச்சர் கருதுங்கால் அவர் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

(7) இச்சட்டத்தின் பகுதி 2ன் கீழ் நியமிக்கப்படும் நெறியாளர் குழுக்களுக்குப் பொதுச் சபையின் சகல அதிகாரங்களும், உரிமைகளும், சலுகைகளும் உண்டு.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஒரு குறிப்பிட்ட சங்கம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனக் கருதுங்கால் அது குறித்துத் தமக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு சகல கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்களையும் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் இச்சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளார்.

நெறியாளர் குழு நியமனங்கள் குறித்து சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து அவர்களுடைய சம்மதத்தை எழுத்து மூலம் பெறுமாறு ஆணையாளர் மேலும் கூறியுள்ளார்.

## செக்கோஸ்லவாக்கிய நவீன மின்தறிகள்

நவீன மின்தறிகளை விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் செக்கோஸ்லவாக்கியாவிலுள்ள இன்வெஸ்ரார் என்னும் வெளிநாட்டு விற்பனை நிலையத்தின் பிரதிமுகாமையாளர் கலாநிதி ஊர்பன் வடபகுதியில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவரும் சங்கங்களுக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

கலாநிதி ஊர்பன் பிரதேச கூட்டுறவாளர் சபையின் செயலாளர் திரு வ பொன்னம்பலம், புரூ மோட்டோர்ஸ் என்ஜினியறிங் நிறுவனத்தின் நெறியாளர் திரு என். சிவசமாரன் முதலியோருடன் திருநெல்வேலி ப நோ கூ சங்கம், சுன்னாகம் ப நோ கூ சங்கம் ஆகியவற்றிற்குச் சென்று தமது நவீன மின்தறிகள் மூலம் சிக்கனமான முறையில் பெருமளவில் துணிவகைகளைத் தயாரிப்பது பற்றி விளக்கினார். கலாநிதி ஊர்பன் நெசவுத்தொழிலில் ஈடுபட்டுவரும் சங்கப் பிரதிநிதிகளுக்காக அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்திலும் மேற்படி விடயம் குறித்து விளக்கம் அளித்தார்.

## சாதாரணபிரிவு பரீட்சை

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி சாதாரண பிரிவு மாணவர்களுக்கு கடந்த ஜூன் மாதத்தில் நடைபெறாத சாதாரண பிரிவு பரீட்சை ஆகஸ்ட் 29, 30, 31ந் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

இப்பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் ஆகஸ்ட் 21ந் திகதி தொடக்கம் 26ந் திகதி வரை மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

# கூட்டுறவுச் சங்கங்களின் நிதிகளும் தணிக்கையும்

ம. க. ஞானப்பிரகாசம்

உறுப்பினர்களின் பொதுவான பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அமைப்புக்கள் கூட்டுறவுகள். இவை சமூக மேம்பாடு, நேர்மை, சிக்கனம், பரஸ்பர உதவி, லாபத்தை விட சேவை, உறுப்பினர்களுக்குச் சங்கப்பணியில் ஈகபாடு உள்ள அளவுக்கு நிகர லாபத்தில் பங்கு, தரகர்களின் லாபத்தைத் தவிர்த்தல் ஆகிய சீரிய கொள்கைகளைக் கொண்டவை. சுருக்கமாக, முதலாளித்துவத்திலுள்ள நல்ல அம்சங்களையும், பொதுவுடைமைக் கொள்கையிலுள்ள நலன்கள் அனைத்தையும் தழுவிச் செல்லும் வழி கூட்டுறவு. ஆதலின் ஜனநாயக நாடுகளிலும் பொதுவுடைமை நாடுகளிலும் இந்த இயக்கம் விரும்பி ஆதரிக்கப்படுகிறது.

## புதுமை இயக்கம்

நமது நாட்டில் நடப்பு நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிராம, நகர நாணயச் சங்கங்களாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது எல்லாத் துறைகளிலும் பரவி, பல தரப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கும் உறுதுணையாகக் கூட்டுறவுகள் உள்ளன. குறிப்பாக, பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்களின் மறு வாழ்வுக்கு இந்த நூற்றாண்டு கண்ட அதிசயம் அல்லது புதுமை கூட்டுறவு என்றால் அது மிகையாகாது. தற்போது நமது நாட்டில் 7 கோடி உறுப்பினர்களைக்கொண்ட 3 லட்சம் கூட்டுறவுகள் உள்ளன. பரவல் முறையில் ஜனநாயக அடிப்படையில் இயங்குவதால் கூட்டுறவுகள் மூலம் ஜனநாயக முறையில் பொதுவுடமை அமைப்பை இந்தியாவில் நிறுவ அரசு; கூட்டுறவுகளுக்கு மான்யமாகவும், கடனாகவும் நிதி உதவி வழங்கி வருகிறது. மேலும் ஸ்டாம்ப் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளிப்பதுடன் பதிவுக் கட்டணத்திலும் சலுகை அளித்துள்ளது. கிராம நாணயச் சங்கங்களுக்குத் தணிக்கைக் கட்டணம் கட்டுவதில் அரசு விதிவிலக்கு அளித்துள்ளது.

## முதலீடு

கூட்டுறவுப் பொருளாதார அமைபபுகளாதலால், அவற்றிற்கு மூலதனம் இன்றியமையாதது. மூலதனம் இரு வகைப்படும். ஒன்று சொந்த மூலதனம், மற்றொன்று கடன்கள் மூலம் திரட்டும் மூலதனம்.

முதலில் சொந்த மூலதனத்தை எடுத்துக் கொள்வோம். இதன் முதல் பாகம் பங்குத்தொகை ஆகும். இது உறுப்பினர்களுடைய சிக்கனத்தையும் சங்கத்தில் அவர்களுக்குள்ள பொறுப்பையும் வளர்க்கிறது சொந்த மூலதனத்தை உருவாக்குகிறது. உறுப்பினர்கள் சங்கத்தைவிட்டு நீங்கும்போது பங்குத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும். 1954-க்குப்பின் கோர்வாலா தலைமையில் நியமிக்கப்பட்ட அகில இந்திய கிராம நாணய ஆய்வுக்குழு, அதன்பின் நியமிக்கப்பட்ட டாக்டர் பி. நடேசன் குழு போன்ற பிற குழுக்களின் பரிந்துரைகளின் பேரில் அரசும் பல தரப்பட்ட கூட்டுறவுகளில் பங்கு முதலீடு செய்கிறது. இதனால் ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட்டுறவுகள் பெருமளவுக்குப் பணி புரிய முடிகிறது.

சொந்த மூலதனத்தின் மற்றொரு பாகம் சேமநிதி. சேமநிதிக்காக நிகர லாபத்தில் ஆண்டுதோறும் ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது. கடன் வாங்கும் அளவு சொந்த மூலதனத்தில் எத்தனை மடங்காக இருக்க முடியுமென்று பிரிவு 59 விதி 442-ன் கீழ் சங்கத் துணை விதிகளில் பதிவாளரால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆதலால் ஒரு சங்கம் கடன் வாங்கக்கூடிய உச்ச அளவு அதன் சொந்த மூலதனத்தைப் பொறுத்தது. திட்ட காலத்திற்கேற்ப சங்கங்கள் விரிவான முறையில் நிதி திரட்டி இயங்க, 1960-க்குப்பின் மேத்தா தலைமையில் கூடிய கூட்டுறவு நாணயக் குழுவின் பரிந்துரையின்பேரில் சொந்த மூலதனத்தைக் கணக்கிட சேமநிதியோடு கீழ்க் கண்ட நிதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். அதாவது நிகர லாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு சங்கத்தில் தேங்கியிருக்கும் ஈவு சமப்படுத்தும் நிதி, விவசாயக்கடன், சம நிலை வைப்புத்தொகை போன்ற நிதிகளைச் சேர்த்துக்கொள்ளலாம். கடன் வாங்கும் உச்ச அளவை விளக்கப்பின் கண்ட உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். தமிழ் நாட்டில் சொந்தமூலதனத்தைப்போல கிராம நாணயச் சங்கம் 10 மடங்கும் மைய வங்கி 1[illegible] மடங்கும், மாநில வங்கி 5 மடங்கும் இட்டு வைப்பாகவும் கடனாகவும் பெறலாம்.

இனி, கடன் மூலம் பெறக்கூடிய மூலதனத்தை எடுத்துக்கொள்வோம். இந்த மூலதனத்தில் வைப்புக்களும், கடன்களும் அடங்கும். வைப்புகளில் நடப்பு வைப்பு, சேமிப்பு வைப்பு, சிக்கன சேமிப்பு, தொடர் வைப்பு, நிலையான வைப்பு, வருங்கால சேமநல தொடர் வைப்பு, திருமணத் திட்டம், பணச்சான்றிதழ், நிலனக்கடன், வீட்டு உண்டியல் அணையா விளக்கு என்று அழைக்கப்படும் ஓய்வு ஊதிய இட்டு வைப்பு என்று பல வகைகள் உள்ளன. வைப்புக்கள் சங்கம் தர விரும்பும் வட்டிக்கு வாங்கப்படும் கடன்கள் கொடுப்பவர் கோரும் வட்டிக்குப் பெறப்படும். வைப்புக்களுக்கான வட்டி, கடன்களின் வட்டியை விடக் குறைவாக இருப்பதால் வைப்புக்களைச் சங்கம் அதிகரித்து கடன்களைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். இட்டு வைப்புக்கள் அதிகமாக இருந்தால் சங்கம் பொது மக்களிடையே நல்ல பெயரையும், நம்பிக்கையையும், சிக்கனத்தையும், சங்கத்தில் பணம் போட்டு தேவைப்படும் போது எடுக்கும் பழக்கத்தையும் வளர்க்க முடியும். இது நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து பண வீக்கத்தைத் தடுக்க உதவுகிறது. வைப்புக்களை உறுப்பினர் மூலமும் உறுப்பினரல்லாதார் மூலமும் நிறுவனங்கள் மூலமாகவும் பெறலாம். கூட்டுறவு வங்கிகள் திரட்டும் வைப்புக்களுக்கு 1965-ஆம் ஆண்டின் இட்டு வைப்புப் பாதுகாப்புச் சட்டப்படி பாதுகாப்பு உண்டு. தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 442-ன் படி சங்கம் உறுப்பினர்களிடம் பெறக்கூடிய வைப்புக்களுக்கு முதலிடம் தர வேண்டும். உச்ச அளவுக்குக் குறையும் தொகையை உறுப்பினர் அல்லாதாரிடமிருந்து பெறலாம். உறுப்பினர்களிடையே சிக்கனத்தை வளர்க்கும் குறிக்கோள் இருப்பதனால் இந்தக் கட்டுப்பாடு உள்ளது. இட்டு வைப்புத் தொகையை அதிகரிக்க நிருவாகத்தினர் பணச்சந்தையின் போக்குக்குத் தக்கபடி வட்டி விகிதம் தருதல். எல்லோருக்கும் தகுந்த பல தரப்பட்ட வைப்புக்கள் வாங்குதல், பரிசுத்திட்டம், விளம்பரம் போன்ற முறைகளைக் கையாள வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

வைப்புத்தொகை போதாத நிலையில் கடன் பெறலாம். உதாரணமாக, கிராம நாணயச் சங்கம், மைய வங்கியிலிருந்தும், மைய வங்கி மாநில வங்கியிடமிருந்தும், மாநிலவங்கி ரிசர்வ் வங்கி, விவசாய மறு நிதிக்கழகம் போன்ற பிற நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறுகின்றன. திட்ட காலத்தில் கூட்டுறவுகள் விரைவில் தன்னிறைவு பெற்றுத்திகழ மாநில அரசுகளும் மத்திய அரசும் கடனும், மான்யமும் வழங்குகின்றன. உதாரணமாக, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் மத்திய அரசு, நாணயக் கூட்டுறவுகளுக்கும் நாணயப் பற்றற்ற கூட்டுறவுகளுக்கும் கிடங்கு கட்ட, நவீன அரிசி ஆலை அமைக்க, பதன இயந்திரங்கள் அமைக்க, ஊர்திகள் வாங்க போன்ற காரியங்களுக்கும் நீண்ட காலக் கடனும், மான்யமும் கொடுத்து ஊக்குவிக்கிறது.

## பயன் முறை

இனி நிதிகளை உபயோகிக்கும் முறையைக் கவனிப்போம். நாணய சங்கமாக இருந்தால் பிரிவு 58-ன் படி உறுப்பினர்களுக்கு மட்டும் கடன் வழங்கலாம். விதி விலக்காக சங்க உப-விதிகளுக்குட்பட்டு பணியாளர்களுக்குப் பண்டிகைக் கடன், வாகனக் கடன் முதலியன வழங்கலாம். வைப்புத்தொகை மீது உறுப்பினர் அல்லாதவர்களும் 90 சதவிகிதம் வரை கடன் வழங்கலாம். நாணயப் பற்றற்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், கூட்டுறவுப் பண்டசாலைகளும் உற்பத்திச் செலவு அல்லது வியாபாரச் செலவு, கடனிருப்பின் அதன் மீதான தவணை, வட்டி ஆகியவை நீங்கலாக மீதமுள்ள தொகையைப் பிரிவு 60-ன்படி அஞ்சல் அலுவலகங்களில் சேமித்தல் தகுதிபெற்ற பத்திரங்களில் முதலீடு செய்தல், மற்ற கூட்டுறவுகளில் பங்கு எடுத்தல், தேவைக்கேற்ற முறையில் பலவித இட்டு வைப்புகளில் கூட்டுறவு மைய வங்கிகளிலும், பதிவாளர் உத்தரவுடன் வணிக வங்கிகளிலும் முதலீடு செய்தல் போன்ற வகைகளில் பயன் படுத்தலாம்.

கூட்டுறவு வங்கிகள் சமீப காலத்தில் பணச்சந்தையில் பண விநியோகத்தில் பெரும் பங்கு ஏற்றிருப்பதால் வணிக வங்கிகளைப் போல 1949-ம் வருடத்திய வங்கிகளின் ஒழுங்கு முறைச்சட்டத்தின் கீழ் சில விதிகளுக்கு உட்பட்டு 1965 முதல் இயங்கி வருகின்றன. அவ்வகையில் வணிக வங்கிகளைப் போலவே வைப்புத்தொகையில் 28 சதவிகிதம் நீர்மைச் சொத்துக்கள் உருவில் இருத்தல் வேண்டும். இந்த விகிதத்தைச் சரிபார்க்க, ரிசர்வ் வங்கிக்கு மாதம் ஒருமுறை அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

## நிதி ஒதுக்கீடு

எல்லாக் கூட்டுறவுகளிலும் பொது நிதியிலிருந்து உறுப்பினர் ஊக்குவிப்பு ஈவுத்தொகை போன்று எந்தவித விநியோகமும், பதிவாளர் அனுமதியின்றி செய்தல் கூடாது பிரிவு 62-ன் கீழ் தணிக்கை அறிக்கையில பதிவாளர் நிர்ணயித்த நிகர லாபமானது விதி 46-க்கும், சங்க-உப

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

நீட்டோலை கபிலர்

## இசை வளர விமர்சனம்

எம்மத்தியில் கர்நாடக சங்கீதத்தில் இவ்வளவு திறமையுள்ள இளம் வித்துவான்கள் இருக்கிறார்களா என்ற பூரிப்போடு இசையை ரசித்துக்கொண்டிருக்கும் அந்த இன்ப நிலையினை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்துடன் பின்புறமாகத் திரும்பினேன். அந்த இசை விழா மண்டபத்தின் தூண்கள் அங்கிருந்தவர்களை விட எண்ணிக்கையிகல் கூடுதலாக நிற்பது தெரிந்தன.

இளங்கலைஞர் மன்றம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் கடந்த மாதம் 21 ந் திகதி தொடக்கம் 30 ந் திகதிவரை நடாத்திய இசை விழாவில் ஒரு காட்சியையே மேலே விளக்கினேன்.

பெண்களும் ஆண்களுமாக இளம் வித்துவான்கள் அவ்விழாவிலே மிருதங்சம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை ஆகியவை மூலம் பொழிந்த இசை மாரியின் இனிய நாத அலைகள் இதயத்தில் இன்றும் அகலாது ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

வாய்ப்பாட்டு வித்துவான்கள் பலர் அந்த இசை விழாவில் அனுபவித்து மிக அருமையாகப் பாடினார்கள். பாடி முடிந்தபின் ஆட்கள் இல்லை, எப்பீடிப்பாடுவது என்று சலித்துக்கொண்டார்கள்.

நம் நாட்டுக் கலைஞர் வளரவேண்டும் என்பதற்குப் பணம் செலவழிக்க வேண்டாம், திறமையுள்ள இந்த இசைக் கலைஞருக்கு உற்சாகமூட்டி அவர்களது திறமைகளை வளர்ப்பதற்கு இப்படியான இசை விழாக்களுக்கு வருகைதரும் வகையிலாவது உதவக்கூடாதா என்று யோசித்தேன்.

நமது நாட்டுக்கலைஞர்கள் வளரவேண்டும் என்று கூறுவது வாய்பாடு ஆகிவிட்டது என்று ஒரு வாய்ப்பாட்டுக் கலைஞர் அவ்விழாவில் என்னோடு உரையாடுகையில் கூறினார். அவர் கூறியதில் அர்த்தம் இருக்கிறது.

திறமையுள்ள சங்கீதக் கலைஞர் நம்மிடையே பலர் இருககிறார்கள். அந்தத் திறமைகளை அவர்கள் வளர்த்துக் கொள்வதற்குப் போதிய சந்தர்ப்பம் இங்கே அளிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களை வகுப்பதற்கும், வளர்ப்பதற்கும் நாம் யதார்த்தமான முறையிலே சிந்தித்துச் செயற்பட வேண்டுமே தவிர இங்குள்ள சங்கீதக் கலைஞர் வளரவேண்டும் என்று சும்மா சொல்லிக் கொண்டிருந்தால் அதுவே அவர்களின் வளர்ச்சிக்குத் தடைபோடும் சூழ்நிலைகளை உருவாக்கியும விடலாம்.

நாதஸ்வரம், தவில் ஆகியவை மங்கலகரமான விழாக்களிலெல்லாம் கட்டாயம் இடம்

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## இலங்கையில்

# இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவவேண்டியதன் அவசியம்

இ. சுப்பிரமணியம்
செயலாளர், தேசிய கூட்டுறவுச் சபை, யாழ்ப்பாணம்

கூட்டுறவுக் கொள்கைகளுக்கிணங்க அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக, கலாசார அம்சங்களை மேம்படுத்தலைத் தனது பிரதான நோக்கமாகக்கொண்டு தனி நபர்களை அங்கத்தவர்களாகவுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் முதலாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களென அழைக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட முதலாம் மட்டக் கூட்டுறவுச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுக்கொள்கைகளுக்கமைய தமது தொழிற்பாட்டுக்கு வசதியளிக்கும் நோக்கத்துடன் தாபிக்கின்ற ஒரு கூட்டுறவு நிறுவனமே இரண்டாம்மட்டக் கூட்டுறவுச் சங்கமென்றும் சமாசமென்றும் அழைக்கப்படுகின்றது. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட முதலாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களே பெரும்பாலும் அங்கத்தவர்களாக இருக்கின்றன. அங்கத்துவ சங்கங்களின் தொழிற்பாட்டுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதே இவற்றின் பிரதான குறிக்கோளாகும்.

இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவியக்கத்தின் முதுகெலும்பாகும். இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியும் ஆதரவுமின்றி முதலாம் மட்டக் கூட்டுறவுச் சங்கம் தனது தொழிற்பாட்டை வெற்றிகரமாக நடாத்துவது கடினமாகும். ஒரு தாய் தனது பிள்ளைகளின் வளர்ச்சிக்கும், எதிர்கால நலனுக்கும் உறுதுணையாக விளங்குவதுபோல இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றது.

இந்த உண்மையை 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த கூட்டுறவு இயக்கத்தின் தாபகர்களான ரொபேர்ட்ஓவன், ரொச்டேல் முன்னோடிகள் போன்ற கூட்டுறவாளர்கள் நன்குணர்ந்திருந்தனர். அதனாலேதான் இவர்கள் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும் முயற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். 1833ம் ஆண்டு இங்கிலாந்தில் ரொபேர்ட்ஓவன் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு மகாநாட்டில் கூட்டுறவு மொத்த வியாபார தாபனம்போன்ற இரண்டாம் மட்டக் கூட்டுறவு நிறுவனத்தை நிறுவும் பிரேரணை முதன் முதலாக நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தில் இரண்டாம் மட்டக் கூட்டுறவுத் தாபனத்தை நிறுவும் முயற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

1844 ம் ஆண்டிலே இங்கிலாந்தில் ரொச்டேல் முன்னோடிகள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி முதன் முதலாக வெற்றி பெற்று மாபெரும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சாதனையை நிலைநாட்டியதற்கு இரண்டாம் மட்டக் கூட்டுறவு நிறுவனத்தின் சேவை பெருமளவுக்கு உதவிபுரிந்திருக்கின்றது. முதன் முதலாக 1860ம் ஆண்டு மன்செஸ்டர் நகரில் கூட்டுறவு மொத்த தாபனம் நிறுவப்பட்டது. இங்கிலாந்திலுள்ள கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களின் கூட்டு அமைப்பே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமாகும். இங்கிலாந்து தேசத்தில் 19 ம் நூற்றாண்டில் பல தனியுரிமை நிறுவனங்கள் தோன்றின. இத்தகைய தனியுரிமை நிறுவனங்கள் தொழிலாளர்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் வலுவாகப் பாதித்தன. சமுதாயத்தில் சுரண்டலையும், அநியாயத்தையும் பன்மடங்காக அதிகரித்தன. இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் தனித்தனியாக இயங்கினால் தனியுரிமை ஸ்தாபனங்களின் சுரண்டலிலிருந்து தப்பமுடியாதென்பதையும், தனியுரிமை நிறுவனங்களுடன் போட்டிபோட முடியாதென்பதையும் நன்குணர்ந்தமையால்தான் கூ. மொ. வி தாபனத்தை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று ஏனைய உலக நாடுகள் யாவற்றிலும் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இன்று இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்தின் கொள்கை ஒரு புதிய கோணத்தில் திருப்பப்பட்டிருக்கின்றது. நுகர்வு, உற்பத்தி, பங்கீடு போன்ற பொருளாதாரத் துறைகளில் கடந்த காலங்களில் இலங்கைக் கூட்டுறவு இயக்கம் அனுபவித்து வந்த தனியுரிமைச் சலுகைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இன்று கூட்டுறவு இயக்கம்போட்டிக்குத் தயாராக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களுடனும் அரசாங்க நிறுவனங்களுடனும் போட்டி போட்டுத் தொழிலாற்ற வேண்டிய நிலையில் கூட்டுறவு இயக்கம் விடப்பட்டிருக்கின்றது. போட்டிக்குத் தயாராக வேண்டிய நிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தமது திறமையையும் சேவையையும் அதிகரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் திறமையை வளர்ப்பதற்கு இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் நிறுவ வேண்டியது அவசியமாகும். 1972 ம் ஆண்டு பதிவு குலைக்கப்பட்ட ப. நோ கூ சங்கச் சமாசங்களை மீண்டும் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனைய வியாபார நிறுவனங்களுடன் போட்டி போட்டு வெற்றி பெறுவதற்கு வேண்டிய பலத்தையும், பேரம்பேசும் சக்தியையும் ஒற்றுமையையும் இரண்டாம் மட்டச் சங்கங்கள்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பொருட்களை நியாயமான விலையில் வழங்குதல் மூலமும், சிறந்த சேவையைப் பாவனையாளருக்கு வழங்குதல் மூலமுமே கூட்டுறவியக்கத்தைச் சமுதாயத்தில் வேரூன்றச் செய்யமுடியும். ஏனைய நிறுவனங்களில் சேவை பெறுவதிலும் பார்க்க கூட்டுறவுச் சங்கத்தில் சேவை பெறுவதன்மூலம் அதிக நன்மை பெறலாமென்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டால்தான் கூட்டுறவியக்கம் பிரபலமடைய முடியும். இதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்குத் தரமான பொருட்களை நியாயமான விலைக்கு வழங்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் நிறுவனங்களில் பொருட்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து தரமான பொருட்களை நியாயமான விலையில் விற்பது கடினமாகும். தனியார் நிறுவனங்கள் விலையையும், சந்தையையும் தாம் நினைத்த மாதிரிக் கட்டுப்படுத்துகின்றன. இந்நிறுவனங்கள் தரமற்ற பொருட்களைக் கூடிய விலைக்கே விற்கின்றன. இந்நிறுவனங்களில் கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்து நியாயமான விலைக்குவழங்க முடியாது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் நிறுவனங்களின் சுரண்டலுக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது. இதனைப் போக்குவதற்குத் தகுந்த வழி இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதேயாகும். கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாம மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தமக்குத் தேவையான பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நேராக இறக்குமதி செய்தால் தனியார்துறை நிறுவனங்களின் சுரண்டலிலிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் தப்பிக்கொள்ளலாம். மேலும் அங்கத்தவர்களுக்குத் தரமான பொருட்களை நியாயமான விலைக்கு வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.

ஆரம்ப கூட்டுறவுச்சங்கங்கள் தமது தொழிலைச் சிறப்பாகக் கொண்டு நடத்துவதற்கு வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் வினியோகத்திற்கு வேண்டிய சகல பொருட்களையும் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் தரமாகவும், மலிவாகவும் கொள்வனவு செய்து கொள்ளலாம். 1972ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் நிறுவப்பட்டிருந்த ப.நோ கூ சங்கச் சமாசங்கள் இத்துறையில் அரும் பெரும் சேவைகளை ஆற்றியுள்ளமையை நாம் மறக்கலாகாது.

ப.நோ.கூ. சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கம், நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் போன்ற ஆரம்ப சங்க அங்கத்தவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைத் தரமான விலையில் விற்றுக் கொள்ளுவதற்கு இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உதவிபுரிய முடியும். ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வேண்டிய உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளை இரண்டாம் மட்டச் சங்கங்களினால் இலகுவில் பெற்றுக் கொடுக்கமுடியும். உதாரணமாக வடமாகாணம் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற கடல்அட்டை, சுறுப்பீலி, சங்கு போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்து சிங்கப்பூர் பாகிஸ்தான் போன்ற வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்து தரமானவிலைக்கு விற்றுக் கொடுக்கின்றது. மேலும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய வடபகுதி விவசாய உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அங்கத்துவ சங்கங்களின் மிளகாய், வெங்காயம் போன்ற உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து தரமானவிலைக்கு விற்றுக் கொடுத்தமையை நாம் மறக்கமுடியாது எனவே இன்றைய நிலையில் இரண்டாம்மட்டக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும்பணி தவிர்க்க முடியாத தொன்றாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு வேண்டிய மூலப் பொருட்களையும் உற்பத்திக் கருவிகளையும், பசளை வகைகளையும், இருமிநாசினிவகைகளையும் தனிப்பட்ட வியாபாரிகளிடமே கொள்வனவு செய்து வருகின்றன இதனால் இச் சங்கங்கள் விவசாயிகளுக்கும் உற்பத்தியாளருக்கும் தரமான சேவையை ஆற்ற முடியாமல் இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு இரண்டாம்மட்டக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினால் வெளிநாடுகளிலிருந்து மூலப் பொருட்களையும் உற்பத்தி உபகரணங்களையும் தரமானதாகவும் மலிவானதாகவும் வருவித்துக் கொள்ள முடியும்,

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

**வீரசிங்கம் மண்டபம்**

**வாடகைக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இசை, நடனம், நாடகம் | | |
| | இரவு 5 மணித்தியாலங்கள் | ரூபா | 350— |
| | பகல் .. .. | .. | 300— |
| 2. | கூட்டங்கள், மகாநாடு | | |
| | இரவு 1 மணித்தியாலம் | .. | 125— |
| | மேலதிகம் | .. | 50— |
| | பகல் 1 மணித்தியாலம் | .. | 100— |
| | மேலதிகம் | .. | 50— |
| 3. | திருமணம் 3 மணித்தியாலம் | .. | 350— |
| | மேலதிகம் | .. | 75— |
| | வைப்புப்பணம் இரவு | .. | 250— |
| | பகல் | .. | 150— |

(முற்றொடர்)

# கூட்டுறவின் குறிக்கோள்களும் கொள்கைகளும்— வளர்முக நாடுகளிலே அவற்றின் செயற்பாடுகளும்

**P. E. வீரமன்**

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தென் கிழக்காசியபிரதேச அலுவலகத்தின் முன்னாள் நெறியாளர்

மூலதனத்தில் வட்டி செலுத்தப்படவேண்டுமென்ற கூட்டுறவுக் கொள்கை எதுவுமில்லை. அப்படி ஏதாவது வட்டி செலுத்தப்படுவதாயின் அது மட்டுப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பது கூட்டுறவுக் கொள்கைகளை வரையறுத்த குழுவின் கருத்தாகும். பங்கு முதலுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வட்டி வீதமே வழங்கப்படவேண்டும் என்றும் கூட்டுறவுச் சங்கத்தின் மேலதிகம் ஒவ்வொரு உறுப்பினரின் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்ப அவர்களிடையே கல்களும் சேர்ந்துதான் சங்கத்தின் மேலதிகத்தை உருவாக்குகின்றன. எனவே நியாயத்தின்படி உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் இந்தமேலதிகத்தில் ஒரு பங்கு வழங்கப்படவேண்டும். சில சங்கங்கள் இத்தகைய மேலதிகத்தில் ஒருபாகத்தை அதற்குரிய உறுப்பினர் அல்லாதோருக்கு ஒதுக்கி சங்கத்தில் பங்குகளைப் பெற வாய்ப்பளிக்கின்றது.

வணிகத்தால் ஏற்படும் மேலதிகம் எவரிடமிருந்து பெறப்பட்டதோ அது பொதுமக்களுக்கும் சங்க உறுப்பினர்கள், பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் கூட்டுறவுக்கொள்கைகளைப்பற்றியும் நடைமுறைகளைப் பற்றியும் கல்வி புகட்டுதல்

(3) சங்க உறுப்பினர் சங்கத்துடன் வைத்துக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கேற்ப உறுப்பினர்களுக்கிடையே மேலதிகத்தைப் பங்கிடல்.

பங்கு முதலில் மட்டுப் படுத்தப்பட்ட வட்டி வீதமே வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையை எல்லை சட்டத்தால் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

மேலதிகம் சமத்துவமான முறையில் பங்கிடப்பட வேண்டும் என்ற கொள்கை பெரும்பாலான நாடுகளில் கூட்டுறவுச் சட்டங்களிலே இடம் பெற்றுள்ளது. மொத்த மேலதிகத்தில் 25 வீதம் வழக்கங்கள் அரசிடமிருந்து ஏகபோக உரிமைகளைப் பெறுவதன் மூலம் மீறுகின்றன சில பாவனைப் பொருள்களைப் பங்கீடு செய்வதின் அளவு சிறிதாக இருத்தலுமே.

ஆதாய நோக்கைக் களைய வேண்டும் என்ற கொள்கையை சில இயக் குறைந்தது 75 வீதத்தினரின் ஆதரவு இருக்குமாயின் அச்சங்கத்திற்கு ஏகபோக உரிமை வழங்கப்படுவது நியாயமே. ஆனால் இதற்கும் முன் குறிப்பிட்ட ஏகபோக உரிமைக்கும் ஒப்புவமை இல்லை. தன்னுடைய வசதிக்குறி அரசு வழங்கும் ஏக போக உரிமைகளால் ஏற்படும் ஆதாயம் தரகர் ஆதாய வகையைச் சார்ந்தது இவ்வாறான ஆதாய ஈட்டல் கூட்டுறவுக் கொள் பங்கிடப்படல் வேண்டும் என்றும் கொள்கை வரையறைக்குழு மேலும் கூறிற்று.

மேலதிகத்தைப் பங்கிடுவது பற்றி பல விளக்கயீனங்கள் நிலவுகின்றன. இன்றைய உலகில் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கள் அல்லாதோருடன் தொடர்புகளை வைத்து வியாபாரம் செய்து. வருகின்றன இத்தகைய கொடுக்கல் வாங் அவருக்கே திரும்பவும் வழங்கப்படவேண்டும் என கல்வேர்ட் கூறினர். சங்கத்தின் மேலதிகம் பின்வரும் வழிகளில் வழங்கப்படலாம்.

(1) சங்கத்தின் ஒதுக்கீட்டு நிதிகளுக்கு மாற்றப்படுவது உட்பட, மேலதிகத்தை சங்க வியாபாரத்தின் விருத்திக்கு வழங்குதல்.

(2) பொதுச் சேவைகளை வழங்குதல் முக்கியமாகப் ஆசியாவிலுள்ள வளர்முக நாடுகள் இம்மியும் பிசகாது கடைப்பிடித்து வருகின்றன. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலே நகர்ப்புற கடனுதவுசங்கங்கள் பெருமளவில் ஒதுக்கீட்டு நிதிகளைக் கட்டியெழுப்பி இருப்பதற்கு ஒரு காரணம் இக்கொள்கையைக் கடைப்பிடித்தலே. பல நாடுகளிலே வட்டி வீதத்தின் மேல் மாக சங்கத்தின் ஒதுக்கீட்டு நிதிக்கு மாற்றப்படவேண்டும். பொதுநல நிதி, கட்டிட மதிப்பிழிவு நிதி போன்ற நிதிகளுக்கு ஆதாயத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்படுகின்றது. இலாபப்பங்காக (Rebate) உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகை பொதுவாகக் குறைவாக இருக்கின்றது இதற்குக் காரணம் வியாபாரப் பிரட்டு குறைந்திருத்தலும் சங்கத்தற்கும், சில வினை பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் சில இயக்கங்களுக்கு ஏகபோக உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த ஏகபோக உரிமைக்கும் ஒரு சந்தைப்படுத்துதல் சங்கத்திற்கு வழங்கப்படும் ஏகபோக உரிமைக்கும் வேறுபாடு உண்டு. ஒரு பகுதியிலே உள்ள சந்தைப்படுத்துதல் சங்கத்திற்கு அப்பகுதியில் வாழும் உற்பத்தியாளரில் ஆகக் கைகளுக்கு முரணானதே. மேலும் இத்தகைய ஏகபோக உரிமைகளால் திறமையின்மையும் விழிப்பின்மையும் [illegible] இயக்க[illegible] சிரழி[illegible]றது. தமது கொள்கைகளை மீறுது கூட்டுறவுச் சங்கங்கள் அனுபவிக்கக்கூடிய ஒரேயொரு ஏகபோக உரிமை உறுப்பினர்களின் பற்றுதியும் விசுவாசமுமே.

(வளரும்)

(முற்றொடர்)

# மாறிவரும் காலகட்டங்களில் கூட்டுறவு தன்னுதவி பற்றி சில சிந்தனைகள்

**W. P. வொட்கின்ஸ்**

கைத்தொழில் அமைப்பைச் சீர்திருத்துவதன் மூலம் மேம்பட்ட சமூக அமைப்பை உருவாக்குவதற்கு பல திட்டங்களை முன்வைத்தனர். இச் சிந்தனையாளர்களில் தலைசிறந்தவர்கள் றொபேர்ட் ஓவனும் அவரது காலத்தவராகிய பிரெஞ்சுக்காரரான சார்ள்ஸ் போறியருமாவர். விவசாயத் துறையிலும், கைத்தொழில் துறையிலும் தன்னிறைவு பெற்று சுய ஆதாரதைப் பேணும் தன் விருப்பார்ந்த சமுதாயமே அவர்கள் இருவரினதும் சமூக இலட்சியமாய் இருந்தது. இவ்விலட்சியம் கற்பனை மயமானது என பெரும்பாலாரால் கருதப்பட்ட போதிலும் அது வீசிய ஒளியின் துணை கொண்டு வறிய தொழிலாளர்கள் கூட்டுறவிற்கான மார்க்கத்தைக் கண்டு பிடித்தனர். கூட்டுறவு இயக்கம் வெறும் வேலைத்தள விற்பனை நிலைய இயக்கமாகக் குன்றுது அவற்றை மீறிய பேரியக்கமாக மலரலாயிற்று. அவ்வியக்கம் வெறுமனே பொருளாதார நலன்களைப் பேணும் ஒன்ருக மட்டும் இருககாது மனித குலத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த சமூக ஒழுக்க நெறிக்கொள்கைகளை உள்ளடக்கி இருந்தமையால் இவ்வாறு திகழ ஏதுவாயிற்று. ஆர்வமிகுதியினுல் உந்தப்பட்ட ஓவனின் சீடன் ஒருவன் சமூக வாழ்வின் சகல நோக்கங்களையும் எய்துவதற்கு கட்டுப்பாடற்ற கூட்டுறவே வழி என 1821ல் 'எக்கனௌமிஸ்ற்' என்னும் பத்திரிகையில் எழுதினர்.

19ம் நூற்ருண்டிலே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பரவிய கூட்டுறவு இயக்கம் சுய ஆதாரத்தைப் பேணும் சமுதாயங்களாக வளர்ச்சியுறவில்லை. உறுப்பினர்களின் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கும் பொதுத் தேவைகளுக்கும் ஏற்ப பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின— பாவனையாளர் சங்கங்கள், கடனுதவு சங்கங்கள் (நகரப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும்) கைத்தொழில், விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள், விவசாயிகள் சந்தைப்படுத்துதல் வழங்கீடு சங்கங்கள், வீடமைப்புச் சங்கங்கள் ஆகியனவும் இன்னும் பலவும் ஒவ்வொரு வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் தத்தமது ஒன்றியங்களை நிறுவின. தத்தமது பாதையில் அவை செல்லுகையில் வேறு வகைச் சங்கங்களுடன் அவை சில வேளை ஒத்துழைத்தன. சில சமயங்களில் மோதின. இவ்வாறு கூறுபட்டிருந்த கூட்டுறவு இயக்கங்கள் ஒரு சில நாடுகளிலே பொது நலன்களைப் பேணும் பொருட்டும் அவை குறித்து ஆலோசனை நடாத்துவதற்கும் பிரதிநிதித்துவம் செய்யும் பொருட்டும் பொதுச் சம்மேளனத்தில் இணைந்தன. 19ம் நூற்ருண்டு முடியு முன்னர் இவற்றில் சில இணைந்து அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தை உருவாக்கின.

உலகளாவிய அமைப்பை உருவாக்குவதற்கு இதுவே முதல் நடவடிக்கை எனலாம். இத்தகைய கூட்டுறவு இயக்கங்கள், ஒருசில புறநடைகள் தவிர்ந்து, முழுக்க முழுக்க தன்னுதவி இயக்கங்களாகவே விளங்கின. அரசாங்க ஊக்குவிப்பு எதுவுமே - அல்லது மிகச் சிறிய அளவில்- இன்றி இவை இயங்கியமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. காலப் போக்கிலே ஏனைய நேர்மையான வணிக முயற்சிகளைப் போன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் களவு, மோசடி போன்றவற்றிலிருந்து சட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை அரசாங்கங்கள் உணர்ந்தது உண்மைதான். ஆனல் மற்றுபடி கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஒன்றியங்களும் அரசிடமிருந்து பெற்ற சலுகைகள் மிகவும் சொற்பமே. கூட்டுறவுச் சங்கங்களின் உந்து சக்தியாகவும் அவற்றின் கொள்கைகளை வரையறுப்பவர்களாகவும் விளங்கியவர்கள் உறுப்பினர்களும் தலைவர்களுமே. அவர்களுடைய விடாமுயற்சியும், ஆர்வமும், நல்லறிவும், நம்பிக்கையுமே கூட்டுறவை இயக்கின. சார்ல்ஸ் டெலிஷ், ரேய்சன் போன்ற முன்னணிக் கூட்டுறவாளர்கள் தமது இ[illegible]க்கங்க[illegible] தன்னுதவி[illegible]தன்[illegible] கண்டிப்பாகவும், விடாப்பிடியாகவும் [illegible]யுறுத்தினர் தனக்குரிய சட்ட, நிருவாகத் துறைக்கு அப்பால் அரசாங்கம் வேறு எத்துறையிலும் தலையிடுவதை அவர்கள் எதிர்த்தனர் 1904ல் அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் புடபெஸ்ற் நகரத்தில் நடாத்திய மகாநாட்டில் கூட்டுறவு இயக்கத்திற்கு அரசினர் ஊக்குவிப்பை ஆதரித்தவர்களுக்கும் அதை எதிர்த்தவர்களுக்கிடையே காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதத்தில் திட்டவட்டமான அறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(வளரும்)

சிறந்த தரமுள்ள பொருட்களைப்பெற
கூட்டுறவின் ஆக்கப்பணிக்கு உதவுங்கள்.
குறைந்த விலையில் நிறைந்த பயன்தரும்

பண்கோப் சேட்வகைகள்
பண்கோப் காற்சட்டைகள்
பண்கோப் நைலெக்ஸ் சேலைகள்,
சூட்டிங் வகைகள்.

நல்லெண்ணெய்
நீல சவர்க்காரம்
கைத்தறிப் புடவைகள்
பாண், பிஸ்கட், கேக் வகைகள்

ஆகியவற்றை

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப.நோ.கூ.சங்கத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல. பண்டத்தரிப்பு 808
பண்டத்தரிப்பு 36

## ...நகளும்-

குறைந்தது 75 வீதத்தின
ரின் ஆதரவு இருக்குமா
யின் அச்சங்கத்திற்கு ஏக
போக உரிமை வழங்கப்
படுவது நியாயமே. ஆனல்
இதற்கும் முன் குறிப்பிட்ட
ஏகபோக உரிமைக்கும் ஒப்
புவமை இல்லை. தன்னு
டைய வசதிகருதி அரசு
வழங்கும் ஏக போக உரி
மைகளால் ஏற்படும் ஆதா
யம் தரகர் ஆதாய
வகையைச் சார்ந்தது
இவ்வாறான ஆதாய ஈட்
டல் கூட்டுறவுக் கொள்

## ...டுகளும்

கைகளுக்கு முரணானதே.
மேலும் இத்தகைய ஏக
போக உரிமைகளால் திற
மையின்மையும் விழிப்பின்
மையும் [illegible] கூட்டுறவு
இயக்க[illegible] சீரழி[illegible]றது
தமது கொள்கைகளை
மீறுது கூட்டுறவுச் சங்கங்
கள் அனுபவிக்கக்கூடிய
ஒரேயொரு ஏகபோக உரி
மை உறுப்பினர்களின் பற்
றுதியும் விசுவாசமுமே.

(வளரும்)

கனை வரையறுப்பவர்களா
கவும் விளங்கியவர்கள்
உறுப்பினர்களும் தலைவர்
களுமே. அவர்களுடைய
விடாமுயற்சியும், ஆர்வ
மும், நல்லறிவும், நம்பிக்
கையுமே கூட்டுறவை இயக்
கின. சார்ல்ஸ் டெலிஷ்,
ரபேய்சன் போன்ற முன்
னணிக் கூட்டுறவாளர்கள்
தமது [illegible]க்கங்களை தன்
னுதவி[illegible]தன்மை[illegible] கண்
டிப்பாகவும், விடாப்பிடி
யாகவும் [illegible]யுறுத்தினர்
தனக்குரிய சட்ட, நிருவா
கத் துறைக்கு அப்பால்
அரசாங்கம் வேறு எத்து
றையிலும் தலையிடுவதை

## ...பற்றி

அவர்கள் எதிர்த்தனர்
1904ல் அனைத்துலகக் கூட்
டுறவு இணைப்பு நிறுவனம்
புடபெஸ்ற் நகரத்தில்
நடாத்திய மகாநாட்டில்
கூட்டுறவு இயக்கத்திற்கு
அரசினர் ஊக்குவிப்பை
ஆதரித்தவர்களுக்கும்
அதை எதிர்த்தவர்களுக்கு

## ...ர்

இடையே காரசாரமான
வாதப் பிரதிவாதங்கள்
நடைபெற்றன. இந்த
விவாதத்தில் திட்டவட்ட
மான அறுதியான முடிவு
எதுவும் எடுக்கப்படவில்லை.

(வளரும்)

(முற்றொடர்)

# புதிய அனைத்துலக பொருளாதார அமைப்பு--

அரசுகளுக்கிடையே சமத்துவமான பொருளாதார உறவுகள் நிலவுவதே புதிய அனைத்துலகப் பொருளாதார அமைப்பிற்கு அடித்தளமாகும் அடிப்படை மனித உரிமைகள் உட்பட, சகலருக்கும்—குறிப்பாக வளர்முக நாடுகளின் மிக வறியவர்களுக்கு—அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இப் புதிய அமைப்பின் குறிக்கோளாகும். சர்வதேச மட்டம் தொடக்கம் உள்ளூர் சமுதாய மட்டம் வரை எல்லா மட்டங்களிலும் மிகக்கூடிய ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் நிலவினல்தான் இக் குறிக்கோளை எய்தலாம் என்பது தெள்ளத் தெளிவு.

கூட்டுறவு இயக்கம் மிக அடிப்படையான சமுதாயப் புரட்சி என வர்ணிக்கப்பட்டுள்ளது. கூட்டாக மனிதன் உழைப்பதன் மூலம் ஒருவர் மற்றொருவரின் தேவையை சுரண்டுவது தவிர்க்கப்படுகின்றது. சுரண்டலுக்குப் பதிலாக அவர்கள் கைகோர்த்து தாம் எதிர்நோக்கும் பொதுப் பொருளாதாரப் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து தமது சமூக பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

கூட்டாக மேற்கொள்ளப்படும் தன்னுதவி முயற்சிகள் முழுச் சமுதாயத்திற்கும் நன்மை பயக்கின்றது.

கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியங்களைப் பரந்துபட்ட உலகச் சமுதாயத்திற்குப் பொருந்தச் செய்வதே எம்மை நோக்கும் பணி.

புதிய உலக அமைப்பை உருவாக்குவதற்கு வேண்டிய இலட்சியங்களையும் கொள்கைகளையும் கூட்டுறவு இயக்கம் எமக்குத் தந்து உதவுவதோடு அவ்வமைப்பினை உருவாக்குவதற்கான கருவியாகவும் விளங்குகின்றது.

சிறந்த கருவிகள் என இச்சபை சுட்டிக் காட்டிற்று

அடிப்படைத் தேவைகள் அணுகு முறையைச் செயற்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெரும் பங்குண்டு. தமது

புறங்களிலே போதிய நிறுவன அமைப்புக்கள் இல்லாததினல் இது குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றது-

வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கும், வருமானத்தைச் சமமாகப் பங்

**பிரான்சிஸ் பிளன்சா**

அனைத்துலக தொழில் நிறுவனத்தின் பிரதம நெறியாளர்

வாழ்வைப்பாதிக்கும்முடிவுகளில் மக்கள் பங்குபற்ற வேண்டும், இவ்வாறான பங்குபற்றல் ஓர் அடிப்படைத் தேவை என நாம் முன்பு சுட்டிக் காட்டி

கிடுவதற்கும் சில சமூக சேவைகளை வழங்குவதற்கும் தம்மால் எவ்வாறு உதவ முடியும் என்பதை கூட்டுறவுச்சங்கங்கள்நடைமுறையில்எண்பித்துள்ளன.

## அதன் சமூக நோக்கங்கள்

வளர்முக நாடுகளிலே பொருளாதார சமூக கலாசார அபிவிருத்தி எய்துவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அதிமுக்கிய கருவிகள் என அனைத்துலக தொழில் நிறுவனத்தின் பொதுச் சபை பிரகடனம் செய்துள்ளது குறிப்பாக போதிய வாய்ப்புக்கள் அற்றவர்களின் நிலையை மேம்படுத்துவதற்கு அவை

யிருக்கின்றோம். தமது பொதுத் தேவைகளைப் பூர்த்து செய்யும்பொருட்டு மக்களால் நடாத்தப்படும் நிறுவனங்களே கூட்டுறவுச் சங்கங்கள், எனவே, தமது அடிப்படைத் தேவைகள் என்ன என்பதை மக்கள் வரையறுப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாக கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன கிராமப்

இந்த ஆக்க வேலைகளை மேலும் பலப்படுத்தி, விரிவு படுத்தி அவற்றின் பலன்கள் ஏழை மக்களைக் கூடுதலாக எட்டச் செய்தலே எம்முன் உள்ள பணி மிகக் கீழ் மட்டத்திலுள்ளவர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு வேண்டிய நிறு

வன ஒழுங்கு முறைகளை கூட்டுறவுச் சங்கங்கள்உள்ளடக்கியிருப்பதால் கூட்டுறவு இயக்கத்தினை நாம் மேலும் திட்டமிட்டு பூரணமாகப் பயன்படுத்த வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றி பொதுமக்களிடையே கல்வியறிவு ஊட்டவேண்டியதன் அவசியத்தினை கூட்டுறவுக் கொள்கை வரையறைக் குழு வலியுறுத்தியுள்ளது. இந்தக் கோட்பாட்டிற்கு அமைவாக புதிய உலக அமைப்பினல் ஏற்படக் கூடிய நன்மைகள் பற்றி பொது மக்களுக்கு விளக்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் முனைய வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியங்களும், புதிய உலக அமைப்பின் குறிக்கோள்களும் இயைந்திருப்பதனல் இத்தகைய முயற்சியில் கூட்டுறவு இயக்கம் ஈடுபடுவது அவசியம்.

(முற்றும்,

(முற்றொடர்)

# இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்

நுகர்வோர் திட்டச் செயற்பாடுகளில் அரசு இயந்திரம் தவறி விடுவதும், அல்லது சமூக நல விரோத சக்திகள் சட்டதிட்டத்தை மீறுவதும் இயல்பாக உள்ளது. மேலும், பண்டங்களின் மீதான கட்டுப்பாட்டை நீக்கிவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விடுகிறது எனவே, கூட்டுறவு இயக்கத்தின் மீதான சார்புத் தன்மை அதிகமாகிறது. உத்தரவாதமான பண்ட விநியோகம், தரம், விலை முதலியன கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நுகர்வோருக்குக் கிடைக்கிறது. சட்ட வரம்புகளை மீறுதல், கறுப்புச் சந்தை, இதர ஊழல்கள் போன்றவை இங் அழிக்கப்பட்டு விடுகின்றன. சில்லறை விற்பனையைச் சாதாரணமாக அரசாங்கம் ஏற்று நடத்துவதில்லை. இப் பொறுப்பு, கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. பொருட்கள் தட்டுப்பாடு உள்ள காலங்களிலும், உற்பத்திக்குத் தடை ஏற்படும் சமயங்களிலும், நுகர்வோருக்குச் சீரான விநியோகத்தைச் செய்து நுகர்வோர் பண்டசாலைகள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளன.

### கடமைகள் ஆயிரம்

உணவுப்பொருள் தட்ப்பாடு' உற்பத்திக் குறைவு போன்றவை ஏப் போதும் நாட்டில் ஏற்படக்

கூடும் என்ற நிலை நமது நாட்டில் உள்ளது. எனினும், நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில், நுகர்வோர் கூட்டுறவுகள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றிவரும் என்று கருதப்படுகிறது நாட்டில் சில்லறை விற்பனையைத் தொடர்ந்து நிறைவேற்றி, நிரந்தரமான ஓரிடத்தையும் அது பெற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது இத்துடன், பரந்த. நியாயமான வர்த்தக முறைகள், நவீன வியாபார நுணுக்கங்கள் முதலியவையும் நுகர்வோர் கூட்டுறவுகள் நிறைவேற்ற வேண்டிய மிக முக்கிய கடமைகளாகும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1962-ல், நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு, அரசு நல்ல ஊக்கம் தந்தது. 10,000 மக்கட் தொகை கொண்ட பகுதிகளிலும் நுகர்வோர் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. நுகர்வோர் நலனைப் பெரிதும் காப்பதில் அரசுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு தருவதே இந்தக் கூட்டுற

வுகளின் முக்கிய நோக்கம். சிறப்பாக இயங்குவதன் மூலமே, சந்தையில் மிக முக்கிய பங்கு வகிக்க முடியும் என்ற உண்மை தற்போது உணரப்பட்டு வருகிறது. இதன் மூலம் நாட்டில் முறைகேடான சந்தை முறை அடியோடு அகற்றப்பட்டுவிடும்.

### நான்கு அடுக்குகள்

நாட்டில், 50,000—த்துக்கும் கூடுதலான மக்கள் தொகை கொண்ட நகரங்களை உள்ளடக்கி, நான்கு அடுக்கு முறையிலான நுகர்வோர் கூட்டுறவு அமைப்பொன்று கடந்த சில ஆண்டுகளில் நிறுவப்பட்டது. தேசிய அளவில் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் என்னும் அமைப்பும், 14 மாநிலங்களில்; ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில அளவிலான இணையமும், மாநில மட்டத்தில் 8 நுகர்வோர் விற்பனை மற்றும் நுகர்வோர் இணையங்களும், 450 மத்திய நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலைகளும் உள்ளன இந்த 450 மத்திய நுகர்

வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலைகளும், 150 சிற்றங்காடிகள், 2,640 கிளை விற்பனை நிலையங்கள், மற்றும் 14,275 பிரதமசங்கங்கள் மூலமாக நாட்டில் மிகவும் பரவலாக நுகர்பொருள் வழங்கும் பணி நடந்து வருகிறது. இவற்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 58 லட்சம் நுகர்வோர் குடும்பங்களாகும். (பத்து ஆண்டுகட்கு முன் இருந்த உறுப்பினர் எண்ணிக்கை 16 லட்சம் குடும்பங்கள் மட்டுமே) தற்சமயம் இக் கூட்டுறவுகளின் விற்பனையளவு ரூ 800 கோடியாகும்.

### நீண்ட பயணம்

தொழிற்சாலைகள், சுரங்கங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலன் கருதி, அந்தந்த நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகளைப் பற்றிக் குறிப்பிடுவது மிகவும் இன்றியமையாததாகும். 25 லட்சம் உறுப்பினர்களுடன், தற்போது 5,100 இத்தகைய சங்கங்கள் உள்ளன. தலைநகரில் (புதுதில்லி) மட்டுமே அரசுப்பணியாளர் நுகர்வோர் கூட்டுறவுச்சங்கம் 5,700 உறுப்பினர்களுடனும், ரூ 3கோடி முதலீட்டுடனும், இயங்கி வருகிறது. இச் சங்கம், குடியிருப்புப் பகுதிகளில் 25கிளைகளை அமைத்துச் செயலாற்றி வருகிறது

எனினும், நுகர்வோர் நலனைப் பொறுத்தவரையில், கூட்டுறவுகள் இன்னும் நீண்டபயணம் செல்ல வேண்டியுள்ளது நாட்டில் உள்ள சில்லறை விற்பனையில் 5 சதவிகிதத்தை மட்டுமே நுகர்வோர் கூட்டுற

வுகள் செய்து வருகின்றன என்பது கவலைக்குரியது. வியாபாரத்தை மேம்படுத்தவும், அதே வேளையில் நுகர்வோரின் நலனைக்கருத்தில் கொண்டு பல திட்டங்களைச் செயலாக்குவதும் கூட்டுறவின் தலையாய கடமையாக உள்ளது. இவற்றைச் சிறப்புறச் செயலாற்றி, மக்களுக்கு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

(முற்றொடர்)

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன

## கூட்டுறவு விசாரணைக் குழுவில் நீதி அமைச்சர் கருத்து

கூட்டுறவு அமைப்பு கடனுதவு சங்கங்களின் அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட வேண்டும். இந்தக் கடனுதவு சங்கங்கள் மட்டுமே கடன்களை வழங்க வேண்டும். இதன் மூலம் கடன்களை அறவிடுவதை உத்தரவாதப்படுத்தலாம்.

இவ்வாறு முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. S. செபஸ்தியாம்பிள்ளை சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சாட்சியமளிக்கையில் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களும், விற்பனைத்திணைக்கள உத்தியோகத்தர்களும் விவசாயச் சங்கங்களோடு இணைக்கப்படலாம் என்றார் அச்சமயம் ஜனுப் அபுசாலி இந்தமாதிரிப பண்ணைகளைச் சொந்தமாக நடாத்துவது சிறப்பாக இருக்கும் என்று கருத்துத் தெரிவித்தார்

திரு. செபஸ்தியாம் பிள்ளை மேலும் பேசியதாவது. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அடிப்படையில் சமாசங்களை நிறுவலாம். போக்கு வரத்துச் சங்கங்கள் போன்றவையும் நிறுவப்படலாம். கூட்டுறவு மருத்துவ மனைகள், அரசாங்க மருத்துவ மனைகளோடு போட்டியாக இயங்கினால் மருத்துவச் சேவைகளின் தரம் உயரும். இதனால் மக்கள் நன்மை அடைவார்கள். அதுமட்டுமல்ல, தனியார் மருத்துவ மனைகள்தாம் அறவிடும் கட்டணங்களைக் குறைக்க வேண்டி நேரிடும்.

திரு. வீரமன்: பிரயாணிகள்தான் போக்குவரத்துச் சங்கங்களை உருவாக்க வேண்டுமே தவிர வேறு எவருமல்ல.

திரு. தேவநாயகம்: உம்முடைய தகவுரையின்படி கடனுதவு சங்கமே எல்லாச் சங்கங்கள் மீதும் கட்டுப்பாட்டு அதிகாரம் வகிக்கும். கடனுதவு பகுதி, பாவனைப் பொருட்கள் பகுதி, விளைபொருள் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய சிறிய ப. நோ. கூ சங்கம் இந்தத் தேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்போது ஏன் கடனுதவு சங்கத்தை ஒருவர் நாட வேண்டும்.

திரு. செபஸ்: ஒரு கிராமத்தில் ஒரு கூட்டுறவு நிறுவனம் மட்டும்தான் இருத்தல் வேண்டும். கிராமப்புறப் பொருளாதாரத்தை இதனூடாக விருத்தி செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும்.

### வேறாக இயங்கவேண்டும்

வலி. கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதி திரு. எஸ். செல்லத்துரை பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் விவசாயச் சங்கங்கள் பாவனையாளர் சங்கங்களிலிருந்து தனிவேறாக இயங்க வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பகுதிக்கும் ஓர் ஆரம்பச் சங்கம் இருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றத்தலைவரோ உறுப்பினரோ நெறியாளர் குழுவில் இடம் பெறுவதோடு சங்க விடயங்களில் குறிப்பாகப் பாவனைப் பொருள் விநியோகத்தில் உள்ளூராட்சி மன்றத்திற்கும் பங்கிருத்தல் வேண்டும்.

திரு வீர: ப. நோ. கூ. சங்கங்கள் ஏன் உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புபடுத்தப்படல் வேண்டும்.

### விதிகள் திருத்தப்பட வேண்டும்

கூட்டுறவு இயக்கத்தின் நவீன போக்குகளுக்கு ஏற்ப கூட்டுறவுச் சங்க விதிகள் திருத்தப்பட வேண்டும் என்று திரு செல்லத்துரை மேலும் கூறினார். பொருள் கொள்வனவு குறித்து திரு. செல்லத்துரை கூறியதாவது: ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருக்கும் இரண்டு அல்லது மூன்று ஆரம்பச் சங்கங்களின் பிரதிநிதிகள் பொருள் கொள்வனவைச் செய்யலாம். நெறியாளர் குழுக்களில் 15 அல்லது 20 உறுப்பினர் இடம்பெற வேண்டும். இந்த நெறியாளர்களுள் மூவர் பணியாளர்களினதும் வங்கியினதும் ஆணையாளரினதும் பிரதிநிதிகளாக முறையே இருத்தல் வேண்டும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்கள் கேலிக்கூத்தாகி விட்டபடியால் அவற்றை உடனடியாகக் கலைத்தல் வேண்டும்.

திரு. தேவ: இத்திட்டங்களைக் கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துவிட்டது.

துறைமுகத் தொழிலாளர் கூட்டுறவு சேவைச் சமாசத்தில் அங்கம் வகிக்கும் ஆறு சங்கங்களின் பிரதிநிதியாகத் தான்சாட்சியமளிக்க வந்துள்ளதாகக் கூறிய திரு அந்தோனி தெரிவித்ததாவது: எமது சமாசம் சீராக நிர்வகிக்சப்படவில்லை. நீதியான முறையில் வேலை பங்கிடப்படவில்லை. இப்பொழுது கப்பல் பறியல் வேலைகள் சமாசத்தினால் அல்ல தனிப்பட்ட ஒப்பந்தகாரரால் தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திரு. அந்தோனி தன்னிடம்கையளித்த மகஜரை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கையளிக்கப் போவதாக திரு. தேவநாயகம் தெரிவித்தார்.

வலி கிழக்கு வடடகுதி ப. நோ. கூ. சங்கப் பிரதி திரு சி வேலுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இன்றைய அமைப்பிலே கிளைக்குழுக்களுக்கு எந்தவித அதிகாரமுமில்லை, அவைகள் வெறும் கைப்பொம்மைகளாகி விட்டன. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிளைக்குழு அதிகாரமுள்ளதாய் இருந்தால் துப்படி தெரிவுசெய்யப்பட்ட நெறியாளர் குழுவோடு வெவ்வேறு திணைக்களங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஆலோசனைச் சபை இருத்தல் வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் தோல்விக்கு ஒரு காரணம் தகுதியற்றவர்கள் பணியாளர்களாகச் சேர்க்கப்பட்டமையே. பழைய பணியாளர்களைச் சேவையிலிருந்து நிற்பாட்ட வேண்டும் என்று நாம் கூறவில்லை. அவர்களுக்கு விசேட பயிற்சி களுக்கு பதவியுயர்வு வழங்கப்படுகிறது இதனால் சங்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் திறமையின்மையும், அதிருப்தியும் காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமச்சங்க எல்லைப் பரப்பிற்கும் தனியான ஒரு சங்கம் இருத்தல் வேண்டும் அதற்கு கூடுதலான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

திரு. தேவ: இது எல்லா இடங்களிலும் சாத்தியமல்ல.

## "கூட்டுறவு அமைப்பு கடனுதவு சங்கங்களின் அடித்தளத்தில் கட்டப்படவேண்டும்"

கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாயிருக்கும். அத்துடன் உறுப்பினர்களும் சங்க விடயங்களில் கூடுதலாகப் பங்குபற்ற வாய்ப்பிருக்கும். இன்றைய அமைப்பிலே நெறியாளர்களிடையேயும், நியமன நெறியாளர்களிடையேயும் போட்டிகள் நடைபெறுகின்றன. அரசியல் அடிப்படையில் நியமனங்கள் நடைபெறுவதுதான் இதற்கெல்லாம் காரணம், எம்முடையகருத் அளிக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் அவர்கள் தமது வேலையைச் செம்மையாகச் செய்யமுடியும்.

### வெளியிலிருப்பவர்களுக்குப் பதவி

சேவையிலிருக்கும் தகமையுள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்குப் பதிலாக வெளியிலிருந்து தகமையற்றவர்கள் சேர்க்கப்பட்டு அவர்

கூப்பன் புத்தகங்கள் திருப்பிப் பெறப்பட்ட பின்பு சங்கத்தின் விற்பனை எவ்வாறு இருக்கின்றது என்று திரு. டி. மெல் கேட்டதற்கு திரு வேலுப்பிள்ளை விற்பனையில் ஏறக்குறைய 35 வீதம் விழுந்துவிட்டது. சங்கம் வழங்கும் அரிசி தரக்குறைவாக இருப்பதனால் மக்கள் தனிப்பட்ட வியாபாரிகளை நாடுகிறார்கள் என்றார்.

(முற்றும்)

---

(முற்றொடர்)

# ப. நோ. கூ. சங்கப் பணிப்பாளருக்கான பயிற்சி பாடத்திட்டம்

இ. சேவைகளை வழங்குதல்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமது சங்க அங்கத்துவத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக சேவா வசதிகளையும் வழங்குதல் வேண்டும். இவற்றுள் மிக முக்கியமானது கல்வியினைப் பெற்றுக்கொடுத்தலாகும்.

அ. வயோதிபர் கல்வியும், குழந்தைக் கல்வியும்

ஆ. கூட்டுறவுச் சங்கங்களின் ரொக்க விற்பனை, கடன் விற்பனை என்பனவற்றின் மூலம்

இ. பொதுசேமநல விடயங்களில் ஈடுபடுவதன் மூலம்

ஈ. கலாசார விடயங்களில் ஈடுபடுவதன் மூலம்

ஈ. விசேட சேவைகள்

சமூகத்தில் நிலவுகின்ற பலவித பிரச்சினைகள், தடைகள் என்பனவற்றினை நீக்கும் முகமாக பலவித கமிட்டிகளை நியமனம் செய்வதன்மூலம் சங்க அங்கத்தவர்களின் கவனத்தினை சங்கத்தின்பால் திருப்புவதற்கு சந்தர்ப்பமேற்படும் இந்த வகையிலான இரு கமிட்டிகளின் பெயர்களைக் குறிப்பிட முடியும்.

I. மகளிர் கமிட்டிகள்

இவற்றின் மூலம் வீட்டுப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த சந்தர்ப்பமேற்படும்.

II இளைஞர் கமிட்டிகள்

சமூகத்தின் இளைஞர் பரம்பரையினர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினை முதலிய பாரதூரமானபிரச்சினைகள் நிலவி வருகின்றன. இளைஞர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அவர்களின் தேவைகளை அறிந்து நடவடிக்கைகளை எடுக்க முடியும். இத்தகைய நடவடிக்கைகளினால் அங்கத்துவத்தினை விருத்தி செய்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதனை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபையினருக்கான விடயங்கள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் என்பனவற்றோடு தீர்மானங்களுக்கு வருவது சம்பந்தப்பட்ட முறைகளும், கட்டுப்பாடுகளும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் பணிப்பாளர் சபையினை அதன் மிக முக்கியமானதும், பலம் பொருந்தியதும், பொறுப்பு வாய்ந்ததுமான ஒரு அமைப்பு என அறிமுகம் செய்ய முடியும் இங்கு நாம் இவ்வம்சங்களின் முக்கியத்துவத்தினைப்புரிந்து கொள்வதற்கு முயற்சிப்போம்.

பணிப்பாளர் சபை சங்கத்தின் நிருவாக அமைப்பாகும். இதனை கபினெட் சபை போன்ற ஒரு அமைப்பெனவும் குறிப்பிட முடியும். சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் இதுவாகும். அவ்வாறே சங்க அங்கத்தவர்களின் பிரதிநிதியும் பணிப்பாளர் சபையாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டபூர்வமான அமைப்புக்களாக விளங்குவதோடு அவை சம்பந்தப்பட்ட தீர்மானங்களை வழங்குவது பணிப்பாளர் சபையாகும். ஒரு பக்கத்தில் பொதுச் சபை கிளைகள் என்பனவற்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவுச் சங்கங்க...

விதிகளுக்கும் உட்பட்டு பின்கண்ட முறையில் பிரிக்கப்படுகிறது. முதலாவதாக மூன்று சதவீதம் அல்லது ரூபா 15,000க்கு மேற்படாமல் கூட்டுறவு மேம்பாட்டு நிதிக்கு எடுத்துச்செல்வர். இரண்டாவதாக இரண்டு சதவீதம் அல்லது ரூ. 10,000 மேற்படாமல் கல்வி நிதிக்காக ஒதுக்கப்படும். இது கூட்டுறவுக் கல்விக்காகச் பயன்படும். மூன்ருவதாக 20 சதவிகிதத்திற்குக் குறையாமலும் 30 சதவிகிதத்திற்கு அதிகப்படாமலும் சேமநிதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த நிதி எதர்பாராத நஷ்டத்தை ஈடு செய்யவும், சங்கம் நலிவடைந்து கலேக்கப்படும் காலத்தல் பொறுப்புகளை ஈடு செய்யவும் உபயோகிக்கப்படும். நான்காவது உறுப்பினர்கள் கட்டிய பங்குத் தொகையின் மேல் 9 சதவீதத்திற்கு மேற்படாமல் இலாப ஈவு வழங்கப்படும். ஐந்தாவதாக உற்பத்தி, விற்பனே, கூலி ஒப்பந்தம், ஊர்தி விநியோகம், நுகர்வோர் சங்கங்களில் உறுப்பினர்களின் ஈடுபாடு ஆகியவற்றிற்கு ஏற்ப 25 சதவீதத்திற்கு மேற்படாமல் பூரிப்புத் தொகை வழங்கப்படும். ஆருவதாக பணியாளர்களுக்கு மூன்று மாத அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாமல் பூரிப்புத் தொகைகளை இங்குக் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று உண்டு. அதாவது 20–ம் அதற்கு மேற்பட்ட பணியாளர்களும் உள்ள கூட்டுறவுகளில் போனஸ் சட்டத்தின்படி லாபம் இல்லாவிட்டாலும் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தில் 8.3 சதவீதமும், ஒதுக்கீடு செய்யக்கூடிய உபரி நிதி இருந்தால் 20 சதவீதம் வரையும் பூரிப்புத் தொகை வழங்கலாம். ஏழாவதாக மீதமுள்ள நிகர லாபத்தில் 10 சதவீதம் வரை பொதுநல நிதிக்கு ஒதுக்கி பொதுக் கல்வி, சுகாதாரம் போன்ற காரியங்களுக்காகச் செலவிடலாம். மீதம் ஏதுமிருப்பின் அது சேமநிதியோடு சேர்க்கப்படும்.

## தணிக்கை

கூட்டுறவுகளின் கணக்குகள் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது தணிக்கை செய்யப்பட வேண்டும். தணிக்கையில் தவணை கடந்த கடன்கள் வசூலாகக்கூடியனவா என்று பரிசோதித்தல், ரொக்க இருப்பு, முதலீடு செய்யப்பட்ட சான்றுகள் ஆகியவற்றைப் பரிசோதித்தல், ஆஸ்திப் பொறுப்பு இனங்களை மதிப்பிட்டு சங்கம், லாபம் அல்லது நஷ்டத்தில் வேலே செய்துள்ளதா என்று சோதித்தல் ஆகியவை அடங்கும். இதற்காக இறுதி அறிக்கையின் போது வரவு, செலவு, ஆஸ்திப் பொறுப்பு லாப நஷ்டக் கணக்குகள் ஆகியவற்றைத் தயாரிக்கின்றனர்.

உறுப்பினர்களும், கடன் கொடுத்தவர்களும் சங்கம் தமது நலனேப் பாதுகாக்கின்றதா என்று அறியவும், நிருவாகிகள் சங்கத்தை நல்ல முறையில் கண்காணித்தார்களா என்றறியவும், அரசினுடைய நிதி பிற சலுகைகள் ஆகியவற்றைப்பெறும் கூட்டுறவுகள் நல்ல முறையில் கூட்டுறவுக் கொள்கையின்படி நடக்கின்றனவா என்று தெரிந்து கொள்ளவும் தணிக்கை அறிக்கை உதவுகிறது. மேலும் கையாடல் சரக்குக்குறைவு, சங்க உபவிதிகட்கும் கூட்டுறவுச் சட்டத்திற்கும் விரோதமான காரியங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அவ்விதக் குறைகள் தொடர்ந்து நடவாமல் தடுபபதற்கும் தணிக்கை அறிக்கை உதவுகிறது

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் அரசின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும் இன்னும் குழுவளாசசி பெருததாலும் தமிழ் நாட்டு கூட்டுறவுச் சட்டத்தின் 64-வது பிரிவின்படி கூட்டுறவுப் பதிவாளர் அல்லது அவரது உத்தரவு பெற்றவர் பொறுப்பில் தணிக்கை உள்ளது. கூட்டுறவு நூற்பாலே, சர்க்கரை ஆலே போன்ற பெரிய சங்கங்கள் பதிவாளா நியமிக்கும் தனிப்பட்ட தணிக்கையாளர் மூலமாகத் தணிக்கை செய்யபபடுகின்றன. மற்ற சங்கங்கள் இளநிலே, முதுநிலே சார்ந்த பதிவாளர்களால் தணிக்கை செய்யப்படுகிறது.

பெரிய சங்கங்களில் அடிப்படை விதி 127-ற்கு ஏற்ப அரசு தனியாக அனுப்பி வைக்கும் தணிக்கையாளர்களால் மாதா மாதம் தொடர் தணிக்கை நடைபெறுகின்றது இந்தத் தணிக்கையாளர்களின் சராசரிச் சம்பளம், பயணப்படி, ஓய்வு ஊதியம் முதலியவற்றைச் சங்கமே ஏற்றுக்கொள்கிறது. இத் தணிக்கையாளர்கள் மாதாந்த வரவு செலவு கணக்குகளில் முக்கியமான பதிவேட்டுப் பாக்கிப் பட்டியலைப் பொதுப் பேரேட்டுடன் சரிபார்த்து குறைகளை அவ்வப்போது நிர்வாகத்துடன் கலந்து நிவர்த்தி செய்கின்றனர் மீதமுள்ள குறைகளைத் தொகுத்து அறிக்கை தயாரித்து சங்கத்திற்கு அனுப்புகின்றனர். ஒரு மாதக் கணக்கு அடுத்த மாதக் கணக்கை முடிப்பதற்குள் தணிக்கை செய்யப்படும். நடுத்தரச் சங்கங்களில் இக்கணக்குகளைக் காலாண்டுக்கு ஒரு முறை சரிபார்க்கின்றனர். இறுதியில் ஆண்டு அறிக்கை ஆஸ்திப் பொறுப்பு ஆகியவை. லாப நட்டக் கணக்குடன் தயார் செய்யப்படும்.

## தணிக்கை கட்டணம்

சிறு சங்கங்களில் வருடக் கணக்கு முழுவதும் தணிக்கை ஒரே எடுப்பில் முடிக்கப்படும். இவைகள் தணிக்கையாளர் தணிக்கைக்காக எடுத்துக் கொண்ட நாளேக் கணக்கிட்டு தணிக்கையாளர் பதவிக்குத் தகுந்தாற் போல் தணிக்கைக் கட்ட

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

# ப.நோ.கூ.சங்.

றினேயும், மறுபக்கத்தில் பல்வேறு வித தொழில் விடயங்களேயும் இணைக்கின்ற சங்கிலித் தொடராகவும் இது விளங்குகின்றது ஆதலினல் பணிப்பாளர் சபையினே சங்கத்தின் உயிர் நாடி எனக் குறிப்பிடலாம்.

(வளரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# இந்தியாவில்..

மகத்தான தொண்டு செய்து மக்களுக்கு அன்ருட வாழ்வில்துணே நின்று பணிகளேப் புரிந்து தொடர்ந்து நடந்துவர வேண்டியது அவசியமாகும்.

## தமிழகத்தில்

தமிழ்நாட்டில், நுகர்வோரின் தேவைகளேக் கண்ணும் கருத்துடனும் காதது அளிதது வருகிறது மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையம். 1966-ல் இந்த இணையம் தோற்றுவிக்கப்பட்டது. கூட்டுறவு மொத்த விற்பனேப் பண்டசாலேகள், மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனேச் சங்கங்கள் முதலியன இவ்விணையத்தில் உறுப்பினராக உள்ளன.

அரசு உட்பட, 40 உறுப்பினர்களுடனும் ரூ. 6 36 லட்சம் முதலீட்டுடனும் செயலாற்றிவரும் இவ்வமைப்பு துணி, மளிகைப் பொருட்கள், பாடப்புத்தகங்கள், பாலுணவு முதலியவற்றை விற்பனேசெய்து வருகிறது. தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் முகவராக இருந்து பள்ளிமாணவர்களுக்கு பாடப்புத்தகம் விநியோகம் செய்து வருகிறது. 1975–76-ல் இவ்விணயம 62 86 லட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் செய்து ரூ.81 94 லட்சத்துக்கு விற்பனே செய்திருந்தது. 1976–77-ல் இதன் கொள்முதல் ரூ 145 26 லட்சமாகவும் விற்பனே ரூ 136 35 லட்சமாகவும் உயர்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1976–77-ல் ரூ 10. 20 லட்சம் மதிப்புக்கு மளிகைப் பொருட்களே விற்பனே செய்தது. கொள்முதலே மேற்கொள்வதற்கு இவ்விணையம் கூட்டுக் கொள்முதல் குழுவை அமைத்து உள்ளது.

நோட்டுப் புத்தகங்கள், கட்டுப்பாட்டுக் காகிதம் முதலிய பொருட்கள் விஷயத்தில் இந்த இணையத்தின் பங்கு குறிபபிடத்தக்கது 1975–76-ல் ரூ.3 56 லட்சத்துக்கு மட்டுமே பயிற்சி நோட்டுக்கள் விற்பனேயாயின. அதுவே கடந்த கூட்டுறவு ஆண்டின் போது ரூ 55 லட்சத்தை எட்டியது இதே காலத்தில் கட்டுப்பாட்டுக் காகித விற்பனே ரூ 13.10 லட்சமாக இருந்தது.

## பாட நூல் விநியோகம்

பள்ளி மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் விநியோகிப்பதிலும் பெரும் சாதனேகளே தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் புரிந்து வருகிறது. மாநிலத்தில் உள்ள 40,000 பள்ளிக்கூடங்களுக்கும் புத்தக விநியோகம் செய்து குறிப்பிடத்தகக பணி ஆற்றி வருகிறது.

1975–76-ல் ரூ.199 16 லட்சத்திற்கும், 1976–77–ல் ரூ 225 38 லட்சத்திற்கும் இணையம் பாடப் புத்தகங்களே விற்பனே செய்திருந்தது.

நுகர் பொருட்களில் கட்டுப்பாட்டுத் துணி விற்பனே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது 1976 – 77 மட்டும் ரூ 4 கோடியே 23 லட்சம் மதிப்புக்கு கட்டுப்பாட்டு துணி விற்பனேயை இந்த இணையம் செய்திருந்தது.

இப்பணிகள் மட்டுமின்றி வார்னிஷ் மற்றும் இதர கலவை விற்பனேயையும் இந்த இணையம் செய்து வருகிறது.

மேலும், விருத்தாசலத்தில் மட்பாண்ட தயாரிப்பு நிலேயம் ஒன்றைத் துவக்கவும் இணையம் திட்டமிட்டுள்ளது. இதற்கு 7 லட்ச ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மட்டில் அரசு ரூ 2. 88 லட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 29 ஆயிரம் ரூபாய் செலவில் காபி அரவை நிலேயம் ஒன்றை மதுரையில் அமைக்கவும் திட்டமிட்டுள்ளது. இதற்கு அரசு 27 ஆயிரம் ரூபாவை அனுமதித்துள்ளது

நுகர்வோர் நலனுக்காகச் சிறிய பல பணிகளேச் செய்து கூட்டுறவில் நுகர்வோர் நலம் காண அரும்பாடுபட்டு வரும் இந்த இணையம் 1975-76-ல்3.48 லட்சம் ரூபாயை நிகர லாபமாகப்பெற்றது.

(முற்றும்)

( 3ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கையில் இரண்டாம்...

இன்றைய நிலேயில் கூட்டுறவுச் சங்கங்கள் தமது தொழிலே அபிவிருத்தி செய்து கொள்வதற்கு வேண்டிய தொழில் நுட்ப ஆலோசனேகளேயும் ஒத்துழைப்புக்களேயும் பெற்றுக் கொள்வதற்குப் பாரிய வசதிகள் இல்லாமல் திண்டாடுகின்றன. ஒரு பலம் வாய்ந்த இரண்டாம் மட்டச் சங்கம் இருக்குமாயின் அங்கத்துவ சங்கங்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப வசதிகளேயும், ஆலோசனேகளேயும் பெற்றுக்கொடுப்பது இலகுவானதாக இருக்கும். இரண்டாம் மட்டச் சங்கங்கள வெளி நாடுகளிலிருந்து தொழில் வல்லுனர்களேயும், தொழில் நுட்ப ஆலோசகர்களேயும் வரவழைத்து சங்கங்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவையும், ஆலோசனேயையும் வழங்க முடியும் வடமாகாணம் மீனவ கூட்டுறவுச் சங்கச் சமாசம் அங்கத்துவ சங்கங்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவை வளர்க்க பல முயற்சிகளே மேற்கொண்டு வருவதை நாம் நன்கு அறிவோம்.

ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய வேலேகள் சிலவற்றை இரண்டாம் மட்டச் சங்கங்கள் பகிர்ந்து கொள்வதிஞல் அவற்றின் தொழிற்பாடு இலகுவாக்கப்படுவதுடன் தேவையற்ற செலவுகளேயும் நட்டங்களேயும் குறைத்துக் கொள்ள முடியும். முக்கியமான சில வேலேகளே இரண்டாம் மட்டச் சங்கங்கள் பொறுப்பேற்பதிஞல் ஆரம்ப சங்கங்களுக்கு அதிக முதல், தளபாடம், பணியாளர் களஞ்சிய வசதி, வாகன வசதி தேவைப்படமாட்டாது மேலும் ஆரம்ப சங்கங்கள் தமது நிருவாகத்தையும் சிறந்த முறையில் கொண்டு நடத்தக் கூடியதாக இருக்கும். எனவே இன்று கூட்டுறவுச் சங்கங்களே எதிர்நோக்கியுள்ள பிரச்சினேகளேத் தீர்ப்பதற்கு இரண்டாம் மட்ட கூட்டுறவுச் சங்கங்களே நிறுவ வேண்டியது மிக அவசியமாகும்

பொருளாதாரக் கண்ணேட்டத்தில் மட்டுமல்ல கருத்துரீதியிலும் கூட இரண்டாம் மட்டச் சங்கங்கள் தவிர்க்க முடியாதவையாகும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் இரண்டாம் பட்டச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் தமது கருத்துக்களே ஏகோபித்துத் தெரிவிக்க உதவியாக இருக்கும். ஒரு சங்கம் தனது பிரச்சினேயை எடுத்து விளக்குவதிலும் பார்க்க பல சங்கங்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பு ரீதியாக எடுத்து விளக்கிஞல் அது வலுவுள்ளதாகவும் முக்கியத்துவமுள்ளதாகவும் விளங்கும்.

மேலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே சுய உதவி, பரஸ்பர உதவி, அன்னியோன்னிய உறவு, ஒற்றுமை ஆகிய கூட்டுறவுப் பண்புகளே வேரூன்றச் செய்வதற்கு இரண்டாம் மட்டக் கூட்டுறவு அமைப்பு மிக முக்கியமாகும்; கூட்டுறவுக் கொள்கைகளின்படி சர்வதேசக் கூட்டுறவு ஒருமைப்பாடு மிக முக்கிய இடத்தினேப் பெறுகின்றது. இத்தகைய ஒருமைப்பாட்டை கிராம ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஏற்படுத்துவதற்கு இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களும் மூன்ரும் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களும் முக்கிய இடத்தினே வகிக்கின்றன. எனவே எமது நாட்டில் மேலும் தாமதிக்காமல் இரண்டாம் மட்டக் கூட்டுறவுச் சங்கங்களே நிறுவ வேண்டியது மிக மிக அவசியமாகும்.

# பாட்டாளி வர்க்கத்திற்கு விமோசனம்

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்காக உருவாக்கப்பட்டவை. எனவே இவைகளைச் சிறப்பாக வளர்ப்பது எமது கடமை.

இவ்வாறு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. எஸ், வேலாயுதபிள்ளை யாழ்ப்பாணத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாக சபை உறுப்பினர்களுக்கான மாவட்ட கருத்தரங்கை அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் நேர்மை, திறமையான சேவை ஆகியவை மூலமே சங்கங்களைச் சிறப்புற வளர்க்கமுடியும் என்று சுட்டிக்காட்டினர். மேலும் அவர் பேசுகையில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை எடுத்துக்கூறி அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் விளக்கினர்.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணியாளர்களுக்கு, பணியாளர் ஆணைக்குழுச் சட்டப் பிரமாணங்களுக்கு அமைய நியமனத்தை வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு க கணேசலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் யாழ்மாவட்டக் குழுச் செயலாளர் திரு. இ சுப்பிரமணியம் நிருவாகசபை உறுப்பினர்களின் கடமைகள், பொறுப்புக்கள் அதிகாரங்கள் ஆகியவற்றை விளக்கினர்

கூட்டுறவுத் திணைக்களத்தின் பதவிநிலை உதவியாளர் திரு P.V. நவரத்தினம், இணைப்பு உத்தியோகத்தர் திரு K. நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவுச் சங்கங்களின்...

ணம் மட்டும் அரசுக்குக் கட்டுவார்கள். ஒரு தணிக்கையாளருக்கு சராசரி 15 சங்கங்கள் இருக்கும். கட்டணம் பிரிவு 64 (6)-ன்கீழ் விதிக்கப்படுகிறது. சிறுபான்மையினருக்காக இயங்கும் ஹரிஜனங்களுக்கான சங்கம் மீன் பிடிப்போர் சங்கம், பிரதம விவசாய நாணயச் சங்கம், பயிற்சிக் கழகம், மேற்பார்வைக் கழகம். பனைத்தொழில் உற்பத்தியாளர் சங்கம் ஆகியவற்றிற்கு தணிக்கைக் கட்டணம் இல்லை.

கணக்குப் புத்தகங்கள், ரொக்கம் முதலியவற்றை வைத்திருப்பவரிடமிருந்து சாதாரண முறையில் அவற்றைப் பெற முடியாதபோது தணிக்கையாளர் சம்மன் பிறப்பித்து அவற்றைப்பெற அதிகாரம் உண்டு. சம்மனைப் பெற்றவர் அவ்விதம் அவற்றை ஆஜர் படுத்தத் தவறுவது கூட்டுறவுச் சட்டம் பிரிவு 101—ல் கீழும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 175ல் கீழும் குற்றமாகும். நிர்வாகத்தைப் பற்றித் தனக்குத் தேவைப்படும் விவரங்களைச் சங்க அதிகாரி, பணியாளர் ஆகியோரிடமிருந்து எழுத்துமூலம் கேட்டுப்பெறும் உரிமை தணிக்கையாளருக்கு உண்டு. அவ்விதம் கேட்கும் விபரங்களைத் தரத்தவறினல் பிரிவு 101-ன் கீழ் அது குற்றமாகும். தாம் தயாரிக்கும் தணிக்கை அறிக்கையில் தணிக்கையாளர், சங்கம் வேலை செய்யும் நிலையைப்பற்றிய முழு விபரத்தையும், தாம் தயாரித்த வரவு செலவுக் கணக்கு, ஆஸ்திப் பொறுப்புக் கணக்கு, லாப நட்டக் கணக்கு ஆகியவற்றை இணைத்து அவைகள் உண்மையானவையா, சரியானவையா என்ற விவரத்தையும், தமக்குத் தேவையான விவரங்களும் விளக்கங்களும் கிடைத்தனவா இல்லையா என்ற விரைத்தையும 54—ஆம் விதியின் மூன்ருவது உட்பிரிவிற்கு ஏற்பக் கூறவேண்டும்.

## முப்பிரிவுகள்

அறிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட குறைகளை அவற்றின் தரத்திற்கு ஏற்ப ஏ, பி, சி, என வகைப்படுத்துவர். சாதாரணக் குறை ''ஏ'' பிரிவில் குறிப்பிடப்படும். மறுக்கப்பட்டு வசூலிக்க வேண்டிய ஆதாரமற்ற செலவுகள், நிர்வாகஸ்தர் பணியாளர் ஆகியோர் அறிந்திருந்தும் கவனக் குறைவால் ஏற்பட்ட நட்டத்தை அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய இனங்கள் முதலியவற்றை ''பி'' பிரிவில் குறிப்பிட வேண்டும்.

கையாடல், சங்க உப—விதி, கூட்டுறவுச் சட்ட திட்டங்கள் ஆகியவற்றிற்கு விரோதமான காரியங்கள் ஆகியவை ''சி'' பிரிவில் குறிக்கப்படவேண்டும். அறிக்கையைப் பதிவாளர் பெற்றபின் அவர் அதைப் பரிசீலித்து தன்னுடைய கையொப்பத்தை இட்டு தணிக்கைச் சான்றுடன் அதை வெளியிடுவார். தணிக்கை அறிக்கையின் நகல் ஒன்று விதி 54(7)-ன் கீழ் உரிய சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. சங்கம் அறிக்கையை உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் மேலும் அடுத்து வரும் மகாசபைக் கூட்டத்தில் அதை வாசிக்கவேண்டும். தணிக்கைக் குறைகளைச் சங்கம் மூன்று மாதத்திற்குள் நிவர்த்தி செய்து அறிக்கையை சரகத் துணைப்பதிவாளருக்கு அனுப்பவேண்டும்.

பிரிவில் கண்ட கடுங் குறைகள் பற்றி ரகசியமான விபரங்களுடன் தணிக்கையாளர் விசேட அறிக்கை மூலம் மேல் அதிகாரிக்கு அனுப்பவேண்டும். கடுங்குறைகள் மீது பிரிவு 66—ன் கீழ் ஆய்வும் அல்லது 65—ன் கீழ் விசாரணையும் செய்யலாம். பிரிவு 71ன் கீழ் நட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் மீது சர்சார்ஜ் உத்தரவு வழங்கலாம். தமிழ் நாட்டில் 19-56க்குப்பின் கூட்டுறவுச் துறையானது பரிபாலனம் தணிக்கை எனப்பிரிக்கப்பட்டுள்ளது. பதிவாளரின் கீழ் இணைப்பதிவாளர்தகுதி பெற்றுள்ள மாநிலக் கணக்காயர் அலுவலக அதிகாரி பிரதம தணிக்கை அதிகாரியாக விளங்குகிருர். இவருக்கு உதவியாக மாநிலதில் சரக அளவில் கூட்டுறவுக் துணைப்பதிவாளர் தகுதி உள்ள மாவட்டத் தணிக்கை அதிகாரிகள் செயல்படுகிருர்கள். மாநிலத்தின் 21 தணிக்கை சரகங்கள் உள்ளன அவர்களுக்கு உதவியாகத் தணிக்கைத் தணிக்கை சார்—பதிவாளர்களும், முதுநிலை, இளநிலை தணிக்கையாளர்களும் பணிபுரிகிருர்கள். கிராம நாணயச்சங்கங்கள், பனைவெல்ல உற்பத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தணிக்கைச் சான்றை சார்—பதிவாளர்கள் வழங்குகின்றனர். மையச் சங்கங்கள், மாநிலச் சங்கங்கள் ஆகியவற்றின் தணிக்கைச் சான்றை மாநில பிரதம தணிக்கை அதிகாரி வழங்குகிருர். மற்ற சங்கங்களின் தணிக்கைச் சான்றுகளை மாவட்டத் தணிக்கை அதிகாரி வழங்குகிருர்.

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

# இசை வளர...

பெறவேண்டிய மரபு இருந்து வருவதால் நாதஸ்வர தவில் வித்துவான்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதனல் அவர்கள் வளர்ச்சி பெற்று இந்திய வித்துவான்களுக்குச் சமதையாகவும் விளங்கினுர்கள்; விளங்குகின்ருர்கள்.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய துறைகளுக்குச் சந்தர்ப்பம் இல்லாததால் வளர்ச்சி பெருத நிலையில் இருக்கின்றன. அத்துறையிலுள்ள வித்துவான்களிடம் மறைந்திருக்கும் திறமைகளும் பலருக்குத் தெரியாதிருக்கிறது முதலில் அவர்களின் கச்சேரிகளை ஏனைய துறைக் கலைஞர்களும், விஷய ஞானமுள்ள ரசிகர்களும் கேட்டு ரசிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். அத்தோடு அவர்களின் சங்கீதத்தை வளர்ச்சிக்கு ஆதாரமான முறையிலே நன்கு விமர்சித்துவர வேண்டும்.

கர்நாடக சங்கீத வித்துவான்களின் வளர்ச்சிக்குப் பேராசிரியர் கல்கி தனது சஞ்சிகை மூலம் செய்த அரிய விமர்சனங்களையும், அவர்களுக்குச் செய்த பெருஞ் சிறப்புக்களையும் எமது பத்திரிகைகள் நினைத்துப் பார்க்க வேண்டும். பெரிய பெரிய சங்கீத வித்துவான்களாகத் திகழ்ந்தவர்களையும், திகழ்பவர்களையும் கல்கி அன்று தனது எழுத்தாற்றலால் அரவணைத்து வளர்த்தார். தமிழிசை இயக்கத்தை வளர்க்க அவர் செய்த சேவை அளப்பரியது. கலைஞர் வளர வேண்டும் என்று எழுதுவதைவிட அத்தகைய சேவையில் எமது பத்திரிகைகள் உண்மையாக ஈடுபடுவதே பயனுள்ளது.

## இசைக்கருவிகள் செய்யும் கூட்டுறவுச் சங்கம்

கர்நாடக இசைக்குப் புகழ் பெற்ற தஞ்சாவூரில் இசைக்கருவிகளைச் செய்யும் ஒரு கூட்டுறவுச் சங்கம் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. 1952 ல் தொடங்கப்பட்ட இச்சங்கம் கர்நாடக சங்கீதத்திற்குத் தேவையான இசைக் கருவிகளை யெல்லாம் திறம்படத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

# சிறு மாற்றம்

கூட்டுறவுப் பயிற்சி சாதாரண பிரிவிற்கு மாணவர்களை கூட்டுறவுக் கல்லூரிகளில் அனுமதிக்கும்போது நிரந்தர கூட்டுறவு ஊழியர்களுக்கு முதலிடம கொடுத்து இடவசதி இருந்தால் அமய ஊழியர்களையும் அனுமதிக்க வேண்டும் என்று தேசிய கூட்டுறவுச் சபையின் பொதுச் செயலாளர் திரு W.U. ஹேரத் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த பயிற்சிக்கு நிரந்தர கூட்டுறவு ஊழியர்களை மாத்திரம் அனுமதித்து வருவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளரோடு (கல்வி) கலந்துரையாடிய பின்பே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதென்றும் பொதுச் செயலாளர் அக்கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்

# வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவைக் கூட்டுறவுச் சிக்கன கடன் நிவிர்த்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. பொ. தேவராசா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. உபதலைவராக திரு. K செல்வராசாவும், செயலாளராக திரு. சீ. செல்லத்துரையும், பொருளாளராக திரு. ச. பாலசுப்பிரமணியமும், உபதனதிகாரியாக திரு. F. சந்தியாப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிருவாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

திருவாளர்கள் வை. சிவலிங்கம், ச. சத்தியமூர்த்தி, அ. பி. சந்தியாப்பிள்ளை, வை. வே. கந்தசாமி, எஸ், இராசதுரை, சி. சண்முகதாஸ், செல்வி வை. தெய்வநாயகி.

பிரதம விருந்தினர்களாக யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. அ மகாதேவா, யாழ் வைத்திய அதிபர் திரு வி. பி. அமரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. கணேசலிங்கம் இதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

யா. மாநகர ப. நோ. கூ. ச. கிளையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் .244-78